183

Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபேறநில்.

வெண்டாமரை-க.	1913-ம் ஆ ஆகஸ்ட்-மீ	இதழ் அ.

பத்திராதிபர் :— சி. பங்காருப் பத்தர்

கல்வி காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

புதுவை.

வருஷ சந்தா ரூ 1	வெளிநாட்டிற்கு ரூ 2
தபாற் கூலி அணா 4	தனி சஞ்சிகை அணா 2

புதுவை வித்தியாபிவர்த்தனி அச்சுக்கூடம்.

உள்ளுறை.

பக்கம்

கடவுள்:— பத்திராதிபர் ... ...

ஓர் பெரிய குடும்பமுயற்சி:—இதோபதேசி ... ...

ரமணி:— (ஓர் காதற்கதை) ஸ்ரீமத் சு. அ. சுப்பராயப்பிள்ளை புதுவை. ... ...

புண்ணிய பாவங்கள்:— ஸ்ரீமத் வீ - துரைசாமிமுதலியார் கவர்மெண்ட் கல்விச்சாலைத் தமிழ்ப்பண்டிதர், புதுவை ...

மணிமேகலை:— பத்திராதிபர்.... 10

பகவனின் ஷட்குணம்:—ஸ்ரீமத் S. நடேசதேசிகர் கவர்மெண்ட் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர் நிரவி 1

தொல்காப்பியம், பொருளதிகாரம்:— இலக்கணக்குட்டி. 18

மங்கலம்:— வேதாந்தபாஸ்கர் கோயிலூர் ஸ்ரீமத் வீர சுப்பைய சுவாமிகள். 1

நியாயமாலா:— ஸ்ரீமத் அநந்தபத்மநாப ஸ்வாமிகள், காஞ்சிபுரம். 20

சுபோதரத்நாகரம்:— (சைதன்யாமிருதம்) ஸ்ரீமத் செங்கல்வராய முதலியார், காஞ்சிபுரம். 21

புத்தகவரவு:—பத்திராதிபர். 23

சமாசாரம். 24

அறிவிப்பு.

"கலைமகள்" என்னும் பெயரிய இப்பத்திரிகை கல்வி, அறிவு, ஒழுக்கம், இலக்கியம், இலக்கணம், தர்க்கம், பக்தி, ஞானம் முதலிய இன்றியமையாத பல விஷயங்கள் தக்கவர்களாலெழுதப் பெற்று மாதந்தோறும் வெளிவரும்.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்து சுவாமிகள், வேதாந்த பாஸ்கர் கோயிலூர் ஸ்ரீமத் வீர. சுப்பை சுவாமிகள் முதலியபெரியோர்களும் இதற்கு விஷயதானம் செய்து வருவதாக வாக்களித்தருளியுள்ளார்கள்.

இது அதிக பொருட்செலவிற் பிரசுரிக்கப்படினும், தமிழ் வளர்ச்சி கருதி, மிகக்குறைந்த விலைக்கு அமைக்கப்பெற்றுள்ளது. இதனைப் பெற விரும்புவோர் பத்திராதிபருக்கெழுதி வி. பி. தபால் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

185 173

ஓ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். விடுபேறறில்.

வெண்டாமரை - க.] 1913-ம் ஆ ஆகஸ்ட் மீ [இதழ் - அ

இலௌகிகப் பகுதி.

கடவுள்.

(புதுவைக் கலைமகள் கழகத்தின் இரண்டாவது வருடோற்சவத்தில் செய்த உபந்நியாசத்தின் சுருக்கம்.)

(தொடர்ச்சி.)

இனிக் கடவுள் என்று சொல்லப்படும் பொருள் ஒன்று பலவா என்பதைப்பற்றி விசாரிப்போம்.

"பரிபூர்ண மநாத்யந்த மப்ரமேய மவிக்ரியம்
ஸத்கனம் சித்கனம் நித்ய மாநந்த கனமவ்யயம்
ப்ரத்யகேக ரசம் பூர்ண மநந்தம் சர்வதோமுகம
அதோஹய மநபாதேய மநாதேய மநாஸ்ரயம்
நிர்க்குணம்நிஷ்க்ரியம்ஸூக்ஷ்மம்நிர்விகல்பம்நிரஞ்ஜனம்
அநிரூப்ய ஸ்வரூபம் யந் மநோவாசா மகோசரம்
ஸத்ஸம்ருத்தம்ஸ்வதஸ்ஸித்தம் சுத்தம்புத்த மநீத்ருசம்
ஏகமே வாத்வயம் ப்ரஹ்ம நேஹநாநாஸ்தி கிஞ்சன"

இதன் பொருளைச் சற்று ஆராய்வோம். எல்லாவற்றுள்ளும் நிறைந்துள்ளதும், ஆதியந்தமில்லாததும், (ஜனன மரணமில்

லாததென்றபடி) தெரிந்துகொள்ள முடியாததும், (வாங்மனோ புத்திகளுக்கு எட்டாத தென்றபடி) விகாரங்களற்றதும், சத்தை யோடு நிறைந்துள்ளதும், (சுத்மாத்ர ஸ்வரூபமான தென்றபடி) ஞானஸ்வரூபமானதும், சாசுவதமானதும், ஆநந்தகனஸ்வரூபமான தும், (துக்கஹேதுவான கர்மாதிகள் இல்லாத தென்றபடி) நசிக் கும் சுபாவமில்லாததும், (எப்போதும் இருப்பதென்றபடி) ஆத்மா கண்டைக ரஸ ஸ்வரூபமாயிருப்பதும், தேச கால வஸ்து நிருதங்க ளான பரிச்சேதங்கள் அற்றதும், எவற்றுள்ளும் ஆகாயம்போல நிறைந்துள்ளதும், எங்கும் நிறைந்துள்ள பிரகாசமே முகமாயிருப் பதும், எல்லாம் தானுதலினாலே விட்டுவைக்கமுடியாததும், பரி பூர்ணமாதலினாலே ஸ்வீகரிக்க முடியாததும், கற்பித வஸ்து வல் லாததும், ஆதார மில்லாததும், குணமற்றதும், செயலற்றதும், சூக்ஷ்மமாயிருப்பதும், (எவற்றுள்ளும் இருந்து எதற்கும் தெரியப் படாததென்றபடி) விகற்பங்களற்றதும், (வர்ணாசிரம ஜாதிநாமரூப குணங்கள் இல்லாதது என்றபடி) பிரகிருதியில்லாததும், சப்த விருத்திகளினாலே இப்படிப்பட்டதென்று நிரூபிக்கத்தக்கதல்லாத தும் (வாச்சியார்த்தத்தினாலே நிரூபிக்க முடியாததென்றபடி) ஆகிய எந்தப் பிரமம் உண்டோ அது மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டா தது; சத்தையினால் சம்பூரணமானது; (அதாவது எப்போது மிருப்பதென்றபடி) தன்னில் தானே சித்தமாயிருப்பது; பிரகிருதி சம்பந்தமில்லாதது; ஞானஸ்வரூபமானது; இப்படிப்பட்டதென்று சொல்லுதற்கு முடியாதது; ஸஜாதீயபேதமற்றது; விஜாதீயபேத மில்லாதது; ஸ்வகதபேதங்களற்றது; எங்கும் பரிபூரணமாய் நிரதி சயாநந்த ஸ்வரூபமாயுள்ளது. இந்தப்பிரமத்தினிடத்து, பகுரூபத் வம் (அநேகங்களான நாம ரூப விகாராதிகள்) எதுவும் இல்லை.

இங்ஙனம் அத்யாத்மோபநிஷத் முராசறைகின்றது.

" தேவ ஏகோ நாராயண: நத்விதீயோஸ்திகஸ்சித் " நாரா யணனொருவனே தெய்வம், இரண்டாவது பொருளில்லை. என்பது நாராயணோபநிஷத்.

" ஏக ஏக சிவோநித்யஸ் தேதாக்யத்சகலம்ம்ருஷா " நித்திய னாகிய சிவன் ஒருவனே யுளன், அவனுக்கன்னியம் எதுவுமில்லை. என்பது சாரோபநிஷத்.

இன்னோரன்ன சுருதி வாக்கியங்கள் பரப்பிரம்மமாகிய கடவுள் ஒன்றேயென்று கூறுகின்றன.

ஆனால் பிரமன் விஷ்ணு உருத்திரன் என்பனவாதிப் பல பெயர்களையுடைய பல தெய்வங்கள் உள்ளனவாக வழங்கப்படுவனவென்னையோ எனச் சிலர் வினவக்கூடும். எதையும் ஊன்றிவிசாரித்தால் உண்மை விளங்காமற் போகாது.

சித்திரப்படம் ஒன்றே பஞ்சவர்ணங்களொன்றினாலும் சேராமல் தனித்து விளக்கும் அவசரத்தில் தவுதபட மென்றும், பசைக்கூழ்தடவிய அவசரத்தில் ஒட்டிதபடமென்றும், நீலநிறத்தினால் அச்சுக்கட்டின அவசரத்தில் இலாஞ்சன படமென்றும், சித்திரம் வரைந்த அவசரத்தில் இரஞ்சிதபடமென்றும் பெயர் பெறும். இங்ஙனம் சொல்லப்பட்ட பலகாரணங்களாலடைந்த தவுதபட முதலிய பல பெயர்களுக்கும் அச்சுபாவ படத்தையன்றி வேறுபொருள் உள்ளனவோ? இல்லை. அதுபோலவும் மண் ஒன்றே வடிவுகாரணமாக, கட கலச முதலிய பல பெயர்களைப் பெறினும் அம்மண்ணைவிடக் கடகலசாதிப் பல பெயர்களுக்கும் வேறு பொருள் இல்லாமற் போனதுபோலவும், பொன் ஒன்றே செய்கை காரணமாக, கடக மகுட முதலிய பல பெயர்களைப் பெறினும் அப்பொன்னைவிடக் கடகமகுடாதிப் பல பெயர்களுக்கும் வேறுபொருள் இல்லாமற் போனதுபோலவும், அகண்ட பரிபூரண சச்சிதானந்த அத்வைத பரப்பிரம்மமாகிய தெய்வம் ஒன்றே சிருஷ்டியாதி தொழில் காரணமாக, பிரம்ம விஷ்ணு ருத்ராதிப் பல பெயர்களையடைந்தபோதிலும் அப்பிரம்ம சைதன்யத்தை விடப் பிரம்ம விஷ்ணு ருத்திராதிப் பல பெயர்களுக்கும் வேறுபொருளில்லையென்பது வெளிப்படை. எனவே பலகாரணங்களால் பல பெயர்களையடையும் தெய்வம் ஒன்றே யென்பது இனிது பெறப்படும். அன்றியும்,

" தஸ்யாஸ்திகாயாமத்யே பரமாத்மாவ்யவஸ்திதஃ
ஸப்ரஹ்மஸிவஸஹரிஸ் ஸேந்த்ரஸ்ஸோக்ஷரப்பரமஸ்வராட் "

அப்படிப்பட்ட ஜ்வாலையினுடைய மத்தியில் பரமாத்மா இருக்கின்றான், அவனேபிரமன், அவனேசிவன், அவனேவிஷ்ணு, அவனேஇந்திரன், அவனே ஸ்வகீயமாகப் பிரகாசிக்கின்ற பரமாத்மா. என்று தைத்திரீயோபநிஷத் சாற்றுகின்றது.

" ஸப்ரஹ்ம ஸசிவஸ்ஸேந்த்ர: ஸோக்ஷர: பரமஸ்வராட்
ஸஏவவிஷ்ணுஸ்ஸப்ராணஸ்ஸகாலோக்நிஸ்ஸசந்த்ரமா: "

அவனே பிரமன், அவனே சிவன், அவனே இந்திரன், நாசமில்லாதவன், சிரேஷ்டன், ஸ்வகீயமாகப் பிரகாசிப்பவன், அவனே விஷ்ணு, அவனே ப்ராணன், அவனே காலன், அவனே அக்நி, அவனே சந்திரன். என்று கைவல்யோபநிஷத் கழறுகின்றது.

" அதநித்யோ நாராயண:, ப்ரஹ்மா நாராயண:, சிவஸ்ச நாராயண:, சக்ரஸ்ச நாராயண:, திசஸ்ச நாராயண: "

நாராயணன் நித்தியன், பிரம்மா நாராயணன், சிவன் நாராயணன், இந்திரன் நாராயணன், திக்குகள் நாராயண ஸ்வரூபம். என்று மஹாநாராயணோபநிஷத் வழுத்துகின்றது.

" யோஹவை ருத்ரஸ்ஸ பகவான் யஸ்சப்ரஹ்ம, யஸ்ச விஷ்ணு:, யஸ்சமஹேஸ்வர:, யஸ்சவிநாயக:, யஸ்சஸ்கந்த:, யஸ்சேந்த்ர: "

பிரசித்தமான பகவான் ருத்திரனே, அவனே பிரமன், அவனே விஷ்ணு, அவனே மகேசுரன், அவனே விநாயகன், அவனே குமாரசுவாமி, அவனே இந்திரன். என்று அதர்வசிரோபநிஷத் அறைகின்றது.

" சிவாய விஷ்ணு ரூபாய சிவரூபாய விஷ்ணவே [சிவ:
சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணுர் விஷ்ணோஸ்ச ஹ்ருதயம்
யதாந்தரம் நபஸ்யாமி ததாமே ஸ்வஸ்திராயுஷி
யதாந்தரம் நபேதாஸ்யு சிவகேசவயோஸ்ததா "

விஷ்ணு ரூபமாகவுள்ள சிவனைக் குறித்தும் சிவரூபமாகவுள்ள விஷ்ணுவைக் குறித்தும் நமஸ்காரம். சிவனுடைய ஹ்ருதயமே விஷ்ணு, விஷ்ணுவினுடைய ஹ்ருதயமே சிவன், எப்படி இருவரில் எனக்குப் பேதமகப்படவில்லையோ அப்படி எனக்குச் சந்தோஷம் ஆயுள் உண்டாகட்டும், சிவகேசவர்களில் பேதமில்லை என்று ஸ்கந்தோபநிஷத் கழறுகின்றது.

'கைவல்ய நவநீதம்' என்னும் வேதாந்த சாஸ்திரத்தில் தாண்டவமூர்த்தி சுவாமிகள் என்னும் அநுபூதிமான் அத்வைத வஸ்துவாகிய பிரம்மத்தைத் துதித்தருளிய இச்செய்யுளைப் பாருங்கள்.

" ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயனுய் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த் தானே யநந்தமூர்த் தியுமாய் நிற்கும்
மூன்றமுத் தனுமா யின்பப் புணரியா தவனுய் நாளுந்
தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிகின் றேனே."

இதன் பொருள். சிருஷ்டி ஸ்திதி சம்மாரம் என்னும் முத்தொழிற்கும் ஏதுவாகிய பிரமனுகியும் விஷ்ணுவாகியும் ருத்ரனுகியும் இன்னும் அநேக வடிவங்களாகியும் இருக்கின்ற பூரணமான முத்தனுகியும் ஆநந்த சமுத்திரத்திலுதிக்கின்ற ஞான சூரியனுகியும் சதோதயமாகிய சுத்தசைதன்யமான பிரம்மஸ்வரூபத்தை வணங்குகின்றேன் என்பதாம்.

" ஒளிமணி வண்ண னென்கோ வொருவனென் றேத்த நின்ற
களிர்மதிச் சடைய னென்கோ நான்முகக் கடவு ளென்கோ
அளிமகிழ்ந் துலக மெல்லாம் படைத்தவை யேத்த நின்ற
களிமலர்த் துளவ னெம்மான் கண்ணனே மாய னீயே."

என்றார் ஸ்ரீ நம்மாழ்வார்.

" சிவனுகித் திசைமுகனுய்த் திருமா லாகிச்
செழுஞ்சுடராய்த் தீயாகி நீரு மாகிப்
புவனுகிப் புவனங்க ளனேத்து மாகிப்
பொன்னுகி மணியாகி முத்து மாகிப்
பவனுகிப் பவனங்க ளனேத்து மாகிப்
பசுவேறித் திரிவானுர் பவனுய் நின்ற
தவனைய தலையாலங் காடன் றன்னைச்
சாராத சாலநாள் போக்கி னேனே."

என்றார் ஸ்ரீ வாகீசமூர்த்திகள்.

இதுகாறும் கூறிப்போந்த சுருதிப் பிரமாணங்களானும், அநுபூதிமான்கள் திருவாக்காலும், தெய்வம் ஒன்றே பலவோ என்னும் ஆசங்கை பரிகரிக்கப்பட்டு, தெய்வம் ஒன்றேயென்பது நிஸ்ஸந்தேகமாகத் தெளியப்பட்டது.

(தொடரும்.)

பத்திராதிடர்.

ஓர் பெரிய குடும்ப முயற்சி.

ஓர் பெரிய குடும்பத்தில் அநேக சகோதரர்களிருந்தார்கள். அவர்க ளொவ்வொருவருக்கும் பெண்டுபிள்ளையாதிகள் பல்கியிருந்தனர். தங்கள் தங்கள் பெண்டுபிள்ளைகள் முதலியவர்களைப் பாதுகாத்தலிலும், கௌரவப் படுத்துவதிலும் ஒவ்வொரு சகோதரரும் கவனமும் முயற்சியும் உடைய வராயிருந்தமையால் அவரவர்களுடைய கவனம், ஊக்கம், முயற்சி, வல் லமை, அதிருஷ்டம் இவைகளுக்குத் தக்கவாறு ஒவ்வொருவருடைய குடும் பங்களும் கல்வி, அறிவு, செல்வம் முதலிய எல்லாவற்றிலும் சிறந்து விளங் கின. சில சகோதரர் தம் மற்றைச் சகோதரரது முயற்சிக்கு உதவி செய்து வந்தனர். சில சகோதரர் மற்றைச் சகோதரர்களுக்கு உதவி செய்யாராயி னும் மற்றையர்க்கு இடர் ஒன்றும் புரியாதிருந்து தத்தம் காரியங்களில் ஊக்கமுடையராயிருந்தனர். இதற்குக் காரணம் இவர்களியாவரிடத்தும் ஓர் சிறந்த குணம் குடிகொண்டிருந்தது. அதுவே அவர்களது பெரும்பாக் கியம். அஃதியாதெனில் பொறுமையின்மை. பொறுமையானது தன்னை யுடையானையும் பிறரையும் நஷ்டப்படுத்தாதன்மையையுடையதென்பதை அவர்களறிந்திருந்தார்கள். ஆகலின் இப்பல சகோதரர்கள் கூடியுள்ள பெரிய குடும்பம் உலகில் மிகச் சிறப்பாய் விளங்கினது.

அதுபோல நம் இந்து தேசமாகிய பெரிய குடும்பம் கல்வி, அறிவு, செல்வம், ஒற்றுமை, நாகரிகம், இராஜ பக்தி, ஒழுக்கம் முதலியவைகளால் உலகில் சிறந்து விளக்கமுறவேண்டுமாயுல் இப்பெரிய குடும்ப சகோதரர் களாயுள்ள ஒவ்வொரு பகுதி (ஜாதி) யாரும் ஒரு பகுதியாரிடத்து மற் றொரு பகுதியார் பொறுமையுறுமல் தத்தம் (ஜாதி) ஜனங்கள் கல்விமுத லியவற்றுல் சிறக்கும்வண்ணம் பெருமுயற்சியெடுத்துக்கொள்ளல்வேண் டும்.

அங்ஙனம் முயல்பவர்களுக்கு ஊக்கங்கொடுத்தல்வேண்டும். ஊக்கங் கொடுக்கச் சக்தியில்லாதார் பரிகசித்தல்முதலிய காரியங்களால்அவர்களது ஊக்கத்தைப் பங்கப்படுத்தாதாவதிருத்தல்வேண்டும்.

ஒரு பெரிய பாரத்தை எடுக்கவேண்டுமாயுல் அதற்குரிய பல பேரும் தூக்கவேண்டும். தூக்குதற்கு வலியில்லாதார் தூக்குபவர்கட்கிடை யூறுபுரியாதாவதிருத்தல்வேண்டும்.

அங்ஙனமே நம் இந்தியாவின் கூமமாகிய பாரத்தைச்சுமக்க அதற் குரியவர்களாகிய ஒவ்வொரு பகுதியாரும் (ஜாதியாரும்) முயலவேண் டும்.

இப்போது வன்னியர் 'விஸ்வகுலப் பிராம்மணர்' என்னும் கம்மா ளர், கோமுட்டிகள், சேனக்குடையார் முதலிய சில ஜாதியார் தத்தம் ஜாதி யார் கல்வி முதலிய நன்மைகளைப் பெற, தங்கள் தங்களில் மகா ஜன சங்

நங்கள் கூடி ஆலோசித்து வருகின்றனர். முயன்றும் வருகின்றனர். சமீபத்தில் 'பேரிசெட்டிகள்' என்னும் ஒரு பருதியாரும் தம் ஜனங்களின் முற்போக்கைப்பற்றி முயல ஆரம்பித்தவிட்டனர். இன்னும் எத்தனை ஜாதியாரோ நம் இந்தியாவிலுளர். அவர்களியாவருமே இவர்களைப்போல முயலுவார்களாயின் நம்தேசம் வெகு விரைவில் மற்றைய தேசத்தினும் சிறந்து விளங்கும். சுபம்.

இதோபதேசி.

ரமணி.

ஓர் காதற் கதை.

அத்தியாயம் - 2. (தொடர்ச்சி.)

சோகத்திற் சூழ்ன்றெழுந்த தன் சோதரியின் குரலைக் கேட்டான் ரமணி. உடனே, அவள் இதழ்களி லிலங்கிய மந்தஹாஸம் மறைந்து விட்டது. இருகன்னங்களாகிய ரோஜா மலர்கள் மல்லிகை மலர்களாக மாறின. நேத்திரங்களில் நீர் நிறைந்தது. நெஞ்சங் கொதித்தது. சரீரமுழுதும் நடுக்கமுற்றது. சாவித்திரியை இறுகத்தழுவி முத்தமிட்டு அவளது சஞ்சலத்தைத் தணிக்கும் அமிர்த மொழிகளைப் பேசப் பேராவலுற்றுள். ஆனல் ரமணி ஓர் சாதாரண ஸ்திரீயல்லள். சந்தர்ப்பத்திற் கேற்றவாறு, உவகை, சோகம், கோபம் முதலிய உள்ளக்கிளர்ச்சிகளைத் தனக்குள்ளேயே அடக்கிக் கொள்ளுவதில் சமர்த்தி. ஆகையால் அடுத்த கூணத்தில், அவள் முகத்திற் றோன்றிய சஞ்சலச் சின்னங்களனைத்தும் மறைந்து விட்டன. கண்களில் ததும்பிநின்ற ஜலம் பரிதிகண்ட பனிபோல் வற்றிவிட்டது. கன்னங்களிரண்டும் முன்போல் ரோஜாமலர்களாயின. அதரங்களில் ஓர் மாயப் புன்முறுவல் அலர்ந்தது. உள்ளமொன்றுதான் பொங்கிக்கொண் டிருந்தது. இவ்வாறு, பொங்குகின்ற அகத்தோடும் புன்னகை திகழும் அதரங்களோடும் தன் தோழியைநோக்கி "நீஎன்ன பரிதாபஸ்திதியிலிருக்கிறாய்?" என அமைதியொடு வினவினள்.

"அடி ரமணீ! இதுதானு விளையாடுவதற்குச் சமயம்! நான் என்ன செய்வேனடி! என்ன செய்வேனடி!" என்றமொழிகளைப்பிதற்றியவாறே தன் விழிகளிற் பொங்கிப் பொழியும் புனலோடு, தன்னிருகரங்களாலும் தன் சகோதரியை ஆலிங்கனம்செய்து, அடர்த்தியும், நெடுமையும், அதிசோபிதமாயிலங்கும் பளபளத்த கருமையும்வாய்ந்த தன் கூந்தல் அவிழ்ந்து குலைந்து கிடப்பத் தன் முகத்தை அவள் மடிமீது வைத்துத் தேம்பியழலாயினள் சாவித்திரி. இச்சமயம் தன் சோகத்தைத் தன் அகத்திலேயே மறைத்துவைக்க ரமணியாலும் இயலவில்லை. அவள் முகத்தில்முன்புதான்

றிய சஞ்சலச் சின்னங்கள் மீண்டுந்தோன்றின. ஆனல் முன்பு அவள் இத யம் மாத்திரம் பதைத்துக் கொதித்தது. இப்பொழுதோ, அவள் இதயமும் கன்னங்களும் இதழ்களும் அதிவிரைவாய்த் துடித்தன. தேகமுழுவதும் உஷ்ணமயமாயிற்று. ஒவ்வொரு கணமும் அவளது விசால விழிகளிலிரு ந்து அநேக கண்ணீராறுகள் பொங்கி யெழுந்தன. அவ்வாறுகளனைத்தும் உற்பத்தியாயின மறுகணத்தில், அலங்கோலமாய்க் குலைந்திருக்கும்பொழு தும் ஓர் அழகுடனிலங்கும் சாவித்திரியின் அளகபாரக் கடலில் சங்கம மாயின. இவ்வாறு இந்நதிகள் கூந்தற்கடலிற் கூடக்கூட, அவைகளினை சீதளம்மதிமருண்டிருந்த சாவித்திரியினது சிரசின் ஸ்பரிச உணர்ச்சியைத் தாக்கிற்று. தாக்கவே, அவள், தன் தோழி ரமணி தனக்காகத் தயாரமுறு கின்றனென அறிந்து, உடனே தன் தலையை நிமிர்த்தி எழுந்து முன்போ லமர்ந்து ரமணியின் சஞ்சலத்தைத் தணிக்கும் வண்ணம் தன் ஆடையால் தன் கண்களைத்துடைத்துக் கொண்டாள். அத்தருணத்திலேயே அதே கருத்தோடு ரமணியும் தன் விழிகளைத்துடைத்துக்கொண்டாள். இவ்விரு சகோதரிகளும் எக்காலத்தில் ஒருவர் மற்றொருவர்க்காகத் தங்களைத்தாமே தேற்றிக்கொண்டதை யுணர்ந்து, புன்னகையுற்று, சற்று நாணத்துடன் தலைகுனிந்தனர். உயிர்ச்சகோதரிகள் அன்பினல் எனனென்ன விநோதங் கள் நேரிடுகின்றன.

முதன் முதல் ரமணி தன்முகத்தை நிமிர்த்தித் தன் மித்திரியை நோக்கினுள். "இனி என்ன செய்வதடி சாவித்திரி! எல்லாம்ஈசன் செயல்" என வேதாந்தம் பேசித் தேற்றிவிட்டு, "ஆனல் நீ இப்பொழுது என் மடி யில் வடித்த கண்ணீரை விவாஹம் நிச்சயமாவதற்கு முன்னமே உன் அம் மாள் மடியில் வடித்திருக்கவேண்டும். இவ்வளவு நாள் சும்மாவிருந்து விட்டு இப்பொழுது துக்கப்படுவதில் என்ன பிரயோஜனம்?" என்றனள்.

"உனக் கென்னடி தெரியும்? மூன்று மாதமாக நான் கண்ணீரா லேயே முகங்கழுவுகின்றேன். என் கண்ணீரைக்கவனிப்பார் யார்! தாயா வது சில சமயங்களில் என்னோடு தானும் விசனித்து "நான் என்னசெய் வேன்! உன்தகப்பனர் பிடிவாதத்திற்கு நான் என்ன செய்வேன்!" என்று சொல்லுகிறுள். தகப்பனரோ, எப்பொழுதும் வயிரக்கம்மல், பவுன்மாலை, கல்விழைத்த வங்கி, கல்விழைத்த ஒட்டியாணம் முதலிய ஆயிரக்கணக்கான மதிப்புள்ள ஆபரணங்கள், விலையுயர்ந்த ஆடைகள், கோச் வண்டிகள், வேலைக்காரர்கள், மாளிகைகள், பங்களாக்கள், தோட்டக்கள், காணிகள் முதலிய சம்பத்துக்களைப்பற்றிப் பேசிப் பேசித் தான் ஆநந்திக்கிறரே யொழிய 55 - வயதுக் கிழவருக்குத் தன் அருமைப்பத்தினியை விவாஹஞ் செய்வது நியாயமா என்ற விஷயத்தில் மாத்திரம் அவர் புத்தி செல்ல வில்லை. நான் என்ன செய்வேன்! அழுதேன். வாதித்தேன். கெஞ்சினேன். கணற்றில் விழுந்துவிடுவேனென்றும் பயமுறுத்தினேன். அவர் மனம்

அசையவில்லை, "என்றனள் சாவித்திரி." "என்னடி! சுமார் காலு வருஷங்களுக்குமுன்பு கண்ணையன் தன்தகப்பனுருக்குகாற்பதுவயதென்றுதானே சொன்னன். இப்பொழுது அவருக்கு -44- வயதுதான் இருக்கலாம். நீ -11- வயதைக் கூட்டிச் சொல்லுகிறுயே, என் பொய் பேசுகிறுய்?" என்றனள் ரமணி. சரிதானடி! கண்ணையன் அரிச்சந்திரனே! ஒருகால் உன்னைத் தன் தக்ஷைக்கு விவாஹஞ் செய்து வைக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு சொல்லியிருப்பான். நான்தான் அந்த விஜயரங்கப் பெரிய கிழவரைக் கண்ணுற் பார்த்தேனே. பார்த்தவுடனே அவருக்கு அறுபது வயதிருக்குமென்று மதித்தேன். என்தகப்பனுர், 50 வயதென்று சொன்னுர். அம்மான் மாத்திரம் 55 வயதென்று ரகஸ்யமாய் எனக்குச் சொன்னுள். அந்தக் கிழவரைக் கண்டபொழுதே என்மனம் பூதத்தைக் கண்டதி போல் பதறிற்று. அடி ரமணி! என் அமிர்தமே! நாளை இரவு வரையில் தான் நீ உன் சாவித்திரியோடு குலவுவாய். பின்பு நீ அவளைக் காணவேமாட்டாய். எனக் கண்ணீர் பொங்க மீண்டும் தன் தோழியைத் தழுவி அவள் கன்னமொன்றை முத்தமிட்டாள் சாவித்திரி.

" அதென்ன அப்படிச் சொல்லுகிறுயடி! நான் உன் கலியாணத்திற்கு வரமாட்டேனு? நீ உன் நாயகர் வீட்டுக்குப் போனபோதிலும் அடிக்கடி பிறந்த அகத்திற்கு வரமாட்டாயா? அந்தச் சமயங்களில் நான் உன்னைப் பார்க்காமலிருப்பேனு? நீ என்னைப் பார்க்காமலிருப்பாயா? "

" சீ! என்ன வார்த்தைகளைப் பேசுகிறுய்! நாயகனுவது! கலியாணமாவது! சத்தியமாய்ச் சொல்லுகிறேன் கேள். இந்தப்பாழ் விவாஹம் ஒருகாலும் நிறைவேறுது. இவ்வளவு காலமாக என்னை அன்போடாதரித்து வளர்த்து வந்த என் பெற்றோர்களையும் என் உயிர்ச் சகோதரியாகிய உன்னையும் அகன்று விடுவதற்குக் காலம் சமீபித்துவிட்டது ரமணி! என் கற்கண்டே! என் பிரிவைச்சகித்துக் கொள்ள நீ இப்பொழுதே கற்றுக்கொள்ளவேண்டும். "

(தொடரும்.)

சு - அ - சுப்பராயப்பிள்ளை.

புண்ணிய பாவங்கள்.

புண்ணிய பாவமென்ற இவ்விருவினைகட்கும், அறமென்றும், மறமென்றும் வேறு பெயர்களுண்டு.

'அறம்' நூல்களினுலே வரையறுக்கப்பட்டதென்றும் 'மறம்' நூல்களினுலே மறுக்கப்பட்டதென்றும் பொருள் படும். ஆகவே, அறமாவது, இன்ன இன்ன காரியங்கள் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டதென்றும், மறமாவது, இன்ன இன்ன காரியங்களைச் செய்யக்கூடாதென்று விலக்கப்பட்டதென்றும் விளங்கும்.

இவ்விதி விலக்காகிய புண்ணியபாவங்கள் அவை உண்டாகிறமுறையால் தனித்தனி மும்மூன்றுவகைப்படும். அவையாவன:—

புண்ணியம்.

மனத்தாற்செய் புண்ணியம்: வாய்மை, அருள் முதலியன.
வாக்காற்செய் புண்ணீயம்: இன்சொல், புகழ் முதலியன.
காயத்தாற்செய் புண்ணியம்: தானம், தருமம் முதலியன.

பாவம்.

மனத்தாற்செய் பாவம்: காமம், குரோதம் முதலியன.
வாக்காற்செய் பாவம்: பொய், குறளை முதலியன.
காயத்தாற்செய் பாவம்: கொலை, களவு முதலியன.

இவைகளைப்பற்றித் திருவள்ளுவர்
'செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.'
என்றார்.

மற்றைய மேலோர்களும் இங்ஙனமே கூறியுள்ளார்கள். ஆதலால் நாம் செய்யுங் காரியமெல்லாம் புண்ணியமாகவே இருக்கவேண்டும். பாவத்தை ஒருபோதும் செய்யவே கூடாது.

இங்ஙனம் புண்ணியம் புரிவதால் யாது ப்யனெனின், சகல இன்பமும் அநுபவிக்கலாம். இவ்வுலகில் இப்போது சிறிதேனும் புண்ணியஞ் செய்யாதவர் சுகமும் அது செய்பவர் கஷ்டமும் அடையக் காண்கிறோமே எனில், இப்போது ஒருவன் யாதொரு புண்ணியமும் செய்யாதிருக்க அவன் இன்பமடைதற்குக் காரணம். 'வித்தில்லாச் சாம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை' என்றபடி இதற்குமுன் எப்போதாவது செய்துள்ள புண்ணியத்தின் பயனேயாம்.

இப்புண்ணிய பாவங்களில் முன் செய்ததை முன்னே பின் செய்ததைப் பின்னே அநுபவிக்கப் படுமென்னும் நியதியில்லை. ஒருவன் ஒரே காலத்தில், கத்தரியும், வாழையும், தென்னையும் வைத்துப் பயிராக்கினாலும், கத்தரி மூன்று மாதத்திலும், வாழை ஆறு மாதத்திலும், தென்னை ஐந்து வருஷத்திலும் பலன்தரல்போல நாம் செய்யும் கருமங்களுக்குத் தக்கபடி அததற்கு ஏற்பட்ட காலங்களிலேதான் அததன் பயன் அநுபவிக்கப்படும்.

இனிச் சில கருமங்கள் இப்பிறப்பிற் செய்தன இம்மையிலே அநுபவத்திற்காவனவுமுண்டு. உதாரணமாக ஒருவன் மற்றொருவனை அடித்தால் அவனும் இவனை அடிக்கிறான். ஒருவன் மற்றவனுக்கு ஒரு பொருளைக் கொடுத்தால் அவனும் இவனுக்கு அப்பொருளையோ அல்லது வேறு பொருளையோ கொடுக்கக் காண்கிறோமல்லவா? இதனை-

' குற்றேருருவரைக் கூறைகொண்டு கொலைகள் சூழ்ந்த களவெலாம்
செற்றேருருவரைச் செய்தநீமைகளிம் மையேவருந் திண்ணமே '

எனவும்,

'மிகமேவியபுண்ணிய பாவமெனும் வினையின் பயன் மேலொரு காலமுறு
நிகமேவருமென் பதனுளதோ யெல்லாமிவனைச் செறவெய்தினவே'

எனவும்,

பெரியோர் கூறிய வாற்றாலுணர்க.

எந்த இடத்தில் குளிர்ச்சி உண்டாகின்றதோ அந்த இடத்தில் நமது கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் சலசம்பந்த முண்டென்றே கொள்ளவேண்டும். எந்த இடத்தில் உஷ்ணம் தோன்றுகிறதோ அந்த இடத்தில் தழலின் சம்பந்தமுண்டென்றேசாற்றவேண்டுமாகையால், எவன் சுகமடைகின்றானே அவன் பிறர்க்கு இனிமை செய்த புண்ணியப்பயனை அநுபவிக்கிறானென்று கொள்க. எவன் கஷ்டமடைகின்றானே அவன் பிறரை வருத்தின பாவத்தின் பயனை அடைந்தனுபவிக்கிறானென்றே அறிக. இதுபற்றியன்றே திருவள்ளுவர் ' நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார் - நோயின்மை வேண்டு பவர் ' என்று கூறினர்.

இனிச் செய்யத்தக்க புண்ணியங்களைச் செய்யும்போதும் மன மொழி மெய்கள் ஒத்துச் செய்யவேண்டும். வாயினல் வைதுகொண்டே ஒருவனுக்கு ஒரு பொருளைக் கொடுத்தலைப் பார்க்கிலும், கொடுக்காதிருத்தல் நலம்.

மனத்தில் ஒன்றை நினைத்துக்கொண்டே வஞ்சகமாய் வாக்கினல் மட்டும் ஒருவனுக்கு உபசரிப்பதைவிட உபசரியாதிருத்தல் உத்தமம். இப்படிச் செய்கிறதால் வாங்குபவன் கொடுப்பவன் என்ற இருவர்களில் ஒருவனேனும் சந்தோஷிப்பதில்லை. கொடுப்பவன் மனம் மொழி மெய்கள் ஒத்துக்கொடுத்தால்தான், வாங்குபவன் 'உப்பில்லாக் கூழையும் உம்பாராமுதென்ற' மனமகிழ்வான். இங்ஙனமின்றி ஒருவன் வந்து தன்னை யொருக்கிக் கேட்டபோது இதற்கு என்ன செய்து தொலைக்கிறது, இவன் என்ன சொன்னலும் போகிறவனைக் காணவில்லை. எதேனும் தொலைத்து அனுப்புவோமென்று, கொடுப்பவன் கோபத்தோடு வைதுகொண்டே கொடுப்பானுயின் அது சரியான புண்ணியமாகாது. காயத்தாற் செய் புண்ணியம், வாக்கினற் செய் புண்ணியம் இவ்விரண்டும், மனந்தூயராய்ச் சதா கல்லெண்ணங்களையேயெண்ணுவார்க்கன்றே செய்ய முடியும்? முதற் கருவியாகிய மனம் நன்றுகாவிடத்து, எவன் எந்நற்காரியம்செய்தல் இயலும்?

இரவலனுக்கு ஒன்றுங் கொடாவிடினும், இவன் சொல்லும் இன்சொல்லால் யாசகன் மகிழ்கின்றனன்றே? ஆதலால் காயத்தாற்செய் புண்ணியத்தினும் வாக்கின் புண்ணியம் உயர்வுடைத்து. அதவும், மனத்திற்

ரோன்றிய நல்லெண்ணங் காரணமாக உண்டானால், அதனினும் மேன்மை யுடைத்து. ஒருவனுக்கு மனமொழி மெய்கள் செவ்வையாய் வாய்த்திருந் தும், அதற்கேற்பப் புண்ணியம் புரியும் பொருளின்றியினும், வாக்கினால் இன்னுரையாயினும் இசைப்பது முடியாத காரியமா? இது செய்யாதாரை, 'ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல் - ஓகோகொடிது கொடி தம்மா—நாகொன்று, தீவினைக் கம்மியனல் வாய்பூட்டிடப்படின்மற்,றுவா விவரென்செய் வார்' என்று இழித்துக்கூறினர் குமரகுருபரசுவாமிகளும்.

இனி 'ஒல்லும் வகையால் அறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்' என்றபடி,

ஒருவன் தன்னுற் கூடியவரையில் புண்ணியம் செய்யவேண்டியது. அது கூடாதாயினும் புண்ணியம் பண்ணவேண்டுமென்ற எண்ணமாயி னும் எண்ணிக்கொண்டிருக்கவேண்டும்.

இனிச் செய்யலாகாதென்று விலக்கப்பட்ட பாவத்தையும், காயத் தாலும், வாக்காலும், மனத்தாலும் செய்தலாகாது. காயத்தாற் செய்யும் பாவமாகிய கொலைமுதலியவற்றுற்றான். மிகத் துன்பமுண்டாகும் வாக் கின்கணிகழுங் கடுஞ்சொல்முதலியவற்றால் அவ்வளவுதுன்பமின்றெனின்,

'தீயினுற் சுட்டபுண் ணுள்ளாறு மாறுதே, நாவினுற் சுட்ட வடு' என்று திருவள்ளுவர் கூறியதனுற் காயத்தாற்செய் பாவத்தைக் காட் டிலும் வாக்கினுற் செய்வது கொடிதென்றேற்படுகின்றதன்றே? இங்ன னம் செய்வது மனத்திற்றோன்றிய தீக்குணத்தின் காரியமாகையால்அதை நீக்குதல் செய்யாது நெஞ்சத்திருத்துதல் அதனினுங் கொடிதன்றே? ஒரு வன் கெட்ட எண்ணங்களையே சிந்தித்திருக்கின் நினைப்பின் வழியதுரை யாதலால், வாக்கினாலும், அவ்வாக்கின் முதிர்ச்சியால் காயத்தாலும் அநேக பாவ காரியங்கள் உண்டாகுமென்பதிற்றடையேயில்லை.

இதுபற்றியே, திருவள்ளுவர். 'எனைத்தானுமெஞ்ஞான்றும்யார்க்கு மனத்தானு - மாகுசெய் யாமை தலை' என்று கூறினர். ஆகையால் பாவங் களைப்பற்றிய யோசனையுங் கூடாதென்பது காண்க.

இப்புண்ணிய பாவங்களைச் செய்யத் தூண்டுபவருக்கும், யோசனை கொடுப்பவருக்கும், செய்தவருக்கும், துணையாயுள்ளவருக்கும், அதனை விருத்தி செய்தவருக்கும், இவற்றின் பலாபலன்கள் ஐந்து பாகமாகப் பிரித் தனுபவிக்கப்படும். ஒருவருடைய சம்பந்தமுமில்லாமல் தானே ஒரு காரி யத்தை எடுத்து முடித்துவிட்டால் அதன் பலனைத் தானே அநுபவிப்பான். இதனை:—

'செய்திநல்லற மென்றவன் செய்துமோ வென்றுல்
கொய்திலுற்றுவா யென்றவ னெய்தினின் முடித்தோன்

எய்திமுற்றினேற் கெழிற்றுணை யாயினே னன்பு
பெய்துகாத்துளோ னெவர்க்கும் பெறும்பய னெனக்கும்'

என்னும் சிதம்பர புராணச் செய்யுளாற்றெளிக.

இவற்றில்,

'அரியநல் லறமுற்றி னேன்றன் னினுமதனைப்
புரிதியென் பவன்காப் பவன்புக லிருவருக்கும்
பெரிதுமப் பயன்பதின் மடங்கென் றனர்பெருநூற்
குரியமாந் தர்கள் தீவினைவழிக்குமீ தொக்கும்'

என்றபடி,

மற்றவரைப் பார்க்கிலும் பாவத்தையேனும்புண்ணியத்தையேனும், செய்யென்று ஏவுகின்றவனுக்கும், முடிவில் அது கெடாமல்விருத்தி செய்பவனுக்கும், அதின்பலாபலன் களில் பத்துப்பங்கு உண்டென்று ஏற்படுகின்றன.

ஒருவன் எள்ளளவேனும் நல்ல காரியங்களை இயற்றுதிருந்தாலுலும் கெட்ட காரியத்திற் சிறிதேனுஞ் செய்யாதிருப்பின், அது தானே நன்மார்க்கத்திற் செலுத்துமென்று நவில்வர் நல்லோர். இது:—

'நல்லது செய்த லாற்றீ ராயினும், அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும் - நல்லாற் றுப்பதூஉ நெறியுமாதலே' என்ற

புறநானூற்றுரற் புலப்படுகின்றது.

இதுகாறுஞ் சுருக்கமாகக் கூறியவற்றையுணர்ந்து யாவரும் புண்ணியத்தை இடைவிடாது திரிகரணங்களில் எதெது எந்த எந்தச் சமயம் பயன்படுமோ அததை அந்தந்தச் சமயம் தவறுது உபயோகித்துப் புண்ணியப்பேற்றை அடையக்கடவர்.

வீ - துரைசாமிமுதலியார்,
கவர்ன்மெண்ட் கல்விச்சாலைத் தமிழ்ப்பண்டிதர்,
புதுவை.

இலக்கியப் பகுதி.

மணிமேகலை.

உலக வறவி புக்க காதை.

[பதினேழாவது மணிமேகலை காயசண்டிகையென்னும்
விச்சாதரி வயிற்று யானைத்தியவித்து
அம்பலம் புக்க பாட்டு.]

சசு - சுக. வாடுபசி யுழந்து மாமுனி போயபின்
பாடிமி ழருவிப் பயமலை யொழிந்தெ
னலவலைச் செய்திக் கஞ்சின னகன்ற
விலகொளி விஞ்சையன் விழுமமோ டெய்தி
யாரணங் காகிய வருந்தவன் றன்னுற்
காரண மின்றியுங் கடுகோ யுழந்தனை
வானூ டெழுகென மந்திர மறந்தே
னூனுயிர் நீங்கு மூருப்பொடு தோன்றி
வயிறுகாய் பெரும்பசி வருத்துமென் றேற்குத்
தீங்கனி கிழங்கு செழுங்காய் கல்லன
வாங்கவன் கொணரவு மாற்றே னுக
நீங்க லாற்று கெடுந்துய ரெய்தி
யாங்கவ னுங்கெனக் கருளொடு மூரைப்போன்

இ - ள் வாடுதற்குரிய பசியினால் வருந்தி விருச்சிக முனிவன் சென்றபின்னர், ஒலிமுழங்குகின்ற அருவியாலுண்டாகிய பிரயோசனத்தை யுடைய பொதியின் மலையைவிட்டு நீங்கி, மனத்திற்றோற்றியதை ஆராயாது செய்த என் செய்கைக்கு அஞ்சியகன்ற ஒளி பொருந்திய வித்தியாதரன், தன்பத்தோடு என்னிடம் வந்து, 'அரிய தெய்வத் தன்மையுடைய அருந்தவனுடைய விருச்சிகனால், தக்க காரணமில்லாதிருந்தும் கொடுந் துன்புற்றனை, ஆகாயத்தினிடத்து எழுவாய்' என்று சொல்ல, 'யான் வானிற் செல்லும் மந்திரத்தை மறந்தேன், உடம்பினின்றும் உயிர் நீங்குதற்குக் காரணமாகிய வெப்பத்தோடு தோன்றி வயிற்றைச்சுடுகின்ற பெரும்பசி என்னை வருத்துகின்றது' என்று சொன்ன என் பொருட்டு, அவ்வித்தியாதரன் நல்லனவாகிய இனிய பழங்களும் கிழங்குகளும் செழிய காய்களும் எனக்குக் கொணர்ந்து கொடுக்கவும், நான் பசி தணியேனாக, நீங்க முடியாத மிகுந்த துன்பமடைந்து, வித்தியாதரன் அப்போது எனக்குக் கருணையாற் சொல்வானுயினான்.

சுஉ - எச சம்புத் தீவினுட் டமிழக மருங்கிற்
கம்ப மில்லாக் கழிபெருஞ் செல்வ
ராற்று மாக்கட் காற்றுந் தணையாகி
நோற்றோ ருறைவதோர் நோனக ருண்டாற்
பலகா லாயிரு நிலனெடு போகி
யப்பதி புகுகென் றவனரு ளெய்ய
லிப்பதிப் புகுந்திங் கியானுறை கின்றே
னிந்திர கோடனை விழவணி வருகாள்
வந்து தோன்றியிம் மாநகர் மருங்கே

யென்னுறு பெரும்பசி கண்டன னிரங்கிப்
பின்வரும் யாண்டவ னெண்ணினன் கழியுந்
தணிவில் வெம்பசி தவிர்த்தனே வணங்கினேன்
மணிமே கலையென் வானீபதிப் படர்கேன்

இ - ள். 'இச்சம்புத் தீவிலுள்ள தமிழ் நாட்டில், நடுக்கமில்லாத மிகப் பெரிய செல்வத்தையுடையவர்கள் முற்பிறப்பில் தவம் செய்தவர்கள் வறியவர்களுக்கு அருந் துணையாகி வசிக்கின்ற காவிரிப்பூம்பட்டினம் என்னும் வலிமையையுடைய நகர் ஒன்றுண்டு. ஆகாய வழியிலே செல்லக் கூடாமையால் பலநாள் ஆகுமாயினும் பூமியில் நடந்து சென்று அந்நகரிற் செல்வாயாக' என்று அவ்வித்தியாதரன் சொல்ல, அவ்வண்ணமே யான் இந்நகர்க்கு வந்து சுங்கு வசிக்கின்றேன்; இங்கு இந்திர விழா நடக்கும் ஒவ்வொரு வருடத்திலும் இப்பெரிய பட்டணத்தின் மருங்கில் என் கணவன் வந்து தோன்றி, எனது மிகுந்த பெரும்பசியைக் கண்டு வருந்தி, பின்வரும் வருடத்தை நினைத்து நீங்குவான்; தணிதலில்லாத எனது கொடிய பசியையின்று தவிர்த்தனே; நின்னே வணங்கினேன்; மணிமேகலே! இனி எனது சிறந்த ஊராகிய காஞ்சன புரத்திற்குச் செல்வேன்.

எடு - கூ. தக்கந் துடைக்குந் துகளறு மாதவர்
சக்கர வாளக் கோட்டமுண் டாங்கதிற்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயி
லுலக வறவி யொன்றுண் டதனிடை
யூரு ராங்க ணுறுபசி யுழந்தோ
ராரு மின்மையி னரும்பிணி யுற்றோ
நிடுவோர்த் தேர்ந்தாங் கிருப்போர் பலரால்
வடுவாழ் கூந்த லதன்பாற் போகென்
றுங்கவள் போகிய பின்ன ராயிழை
யோங்கிய வீதியி லொருபுடை யொதுங்கி
வலமுறை மும்முறை வந்தனை செய்தவ்
வுலக வறவியி லொருதனி யேறிப்
பதியோர் தம்மொடு பலர்தொழு தேத்து
முதியோள் கோட்ட மும்முமையின் வணங்கிக்
கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய
தந்துணைப் பாவையைத் தான்றொழு தேத்தி
வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
கருவி மாமழை தோன்றிய தென்னப்
பசிதின வருந்திய பைதன் மாக்கட்
கமுத சுரபியோ டாயிழை தோன்றி
யாபுத் திரன்கை யமுத சுரபியி:

200

தியாவரும் வருக வேற்போர் தாமென
வூணெலி யரவத் தொலியெழுந் தன்றே
யாணர்ப் பேரூ ரம்பல மருங்கென.

இ - ள். இந்நகரில் துன்பத்தை நீக்கும் குற்றமற்ற முனிவர்க ளிருக்கும் சக்கரவாளக் கோட்டம் என்று ஒன்றுண்டு; அதில் பலரும் வந்து புகுதற்காகவே எப்பொழுதும் கதவு திறந்துள்ள பெரிய வாயிலையுடைய 'உலக வறவி' என்னும் பெயரையுடைய அம்பலம் ஒன்றுண்டு; அவ்வுலக வறவியில், ஊர்கள் தோறும் மிகுந்த பசியினால் வருந்தியவர்கள், பாதுகாப் போர் ஒருவருமில்லாமையினாலே தீர்தற்கரிய நோயுற்றவர்கள், பிச்சையிடு வோரைத் தேடி ஆங்கிருப்பவர்கள் பலர்; ஆதலால் வகிர்வாய்ந்த கூந்தலை யுடைய மணிமேகலையே! அவ்விடத்துக்குச் செல்வாயாக' என்று சொல்லி விட்டு, காய சண்டிகை தன்னூர்க்குச் சென்றனள். மின்னார் மணிமேகலை சிறந்த வீதியின் ஒரு பக்கத்தேயொதுங்கிச் சென்று உலக வறவியை யடைந்து, வலமுறையாக மூன்று முறை வந்து பணிந்து அதில் தனித்து ஏறி, அப்பதியிலுள்ளவர்களுடன் பலரும் வணங்கித் துதிக்கின்ற சம்பா பதிகோயிலை மனம் வாக்குக் காயங்களால் வணங்கி, நெடிய தோற்றத்தை யுடைய தூணினிடத்துப் பழவினையாகியகாரணத்தையாவருக்கும்காட்டிய ருள்கின்றதமக்குத்துணையாயுள்ளபாவையை(கந்திற்பாவையை)த்தொழுது துதித்து, வெயில் சுடுதலினாலே வாடிய மூங்கில் கரிந்த காட்டினிடத்து உலகத்திற்குத் தினைக் காரணமாகிய பெரிய மேகம் தோன்றினாற்போல, பசிவருத்தவருந்தியதுன்பத்தையுடையமனிதர்களுக்குமுன்னர், அமுதசுரபி யோடு மணிமேகலை தோன்றி, 'இப்பாத்திரம் ஆபுத்திரன் கையிலிருந்த தாகிய அமுத சுரபி; எற்போராகிய யாவரும் வருக' என்று சொல்ல, பல ரும் வந்துண்பாராயினர்; ஆகவே புதுமையையுடைய அப்பெரிய பட்டி னத்தின் அம்பல மருங்கில் உண்ணுமொலி மிகுந்தெழுந்ததென்க.

உலக வறவி - ஊரம்பலம், இஃது எல்லாச் சாதியாரும் வந்து தங் குதற்குரிய தருமசாலை; இதனை, 'லோகோபகாரிகா' என்பர் வடநூலார். முதியோள் கோட்டம்-சம்பாபதி கோயில். மும்மையின் வணங்கி-மூன்று முறை வணங்கியென்றுமாம். பாவை - கந்திற்பாவை; இது, மேற்கூறிய உலக வறவியில் சம்பாபதி கோயிலின் கிழக்கேயுள்ள தூணொன்றில் தெய் வகணத்தோனுகிய திவதிகனென்பவனுடைய வடிவம்போல மயனால் நிரு மிக்கப்பட்ட பாவை; இது முக்காலச்செய்தியையும் கேட்போர்க்குச் சொல் லும் இயல்பையுடையது; பேசுதல்பற்றி இது நாவுடைப் பாவையென்றுஞ் சொல்லப்படும்.

உலக வறவி புக்க காதை முற்றிற்று.

பத்திராதிடர்.

பகவனின் ஷட்குணம்.

பரம கருணாநிதியாகிய முழுமுதற் கடவுட்கு, முற்றறிவு, வரம்பி லின்பம், இயற்கையுணர்வு, தன் வயம், குறைவிலாற்றல், வரம்பிலாற்றல் என இவ்வாறும் முக்கிய குணங்களெனக் கூறப்படும்.

நமது தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனர் மேலே கூறிய அவ் வறு குணங்களும் கடவுள் வாழ்த்துத் திருக்குறளில் அமைத்துக் காட்டி யதை எடுத்துக் கூறுவோம்.

பிருதிவி முதற் சிவதத்துவாந்தம் வரையுமுள்ள மூப்பத்தாறு தத் துவ புவனங்களின் பொருள்களையும், எவ்வெக்காலத்தும், இருந்தஇருந்த வாறே அறியும் பரப்பிரம்ம பகவானின் முற்றறிவு எனப்படும் சர்வஞ்ஞ தையைத் திருவள்ளுவநாயனாகிய முதற்பாவலர்கடவுள்வாழ்த்தின் இரண் டாவது திருக்குறளில் வாலறிவன் என்றார்.

விசித்திர ரூபமாகிய மகாலிங்கத்தைத் தேவர்கள்புறத்தே பூசித்துத் தத்தம் மேலாகியதிவ்ய போகபதங்களைப் பெற்றவாறுபோல, யாவராயினும் அன்பினோடு பிண்டமாகிய சரீரத்தினகத்தே தகர புண்டரீகத்திலே பரப் பிரம்ம பகவானை ஆன்மலிங்கத்தக்கு நாயகராகக்கொண்டு அந்தரியாக பூசைசெய்து வழிபடின் பரமானந்த கைவல்லிய லட்சுமி எனப்படும் தமது திருவை அவ் வன்பர்களுக்குத் தப்பாது பாலிப்பாரென்பதை உணர்த்து மாறே நந்தெய்வப்புலவனார் அவர் ஸ்ரீபாதத்தைத் திருவடி என்பாராய் மூன் றாவது திருக்குறளில் மாணடி என்று கூறினர்.

பரப்பிரம்ம பகவானாகிய தாம் எப்பொருள்களினும் வியாபகமுற்று நின்றாரேனும் அவர் அப்பொருள்களாற் சிறிதுந் தொடக் குன்றார் என் பதையும் ஒவ்வொரு பொறிகளால் அவ்விஷயங்களைத் தனித்தனியே நுக ரும் ஐம்புலன்களும்,

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.'

என்றவாறு ஐம்புலன்களானும் ஒரே காலத்தில் நுகரப்படுகின்ற சிற்றின்பப்பற்றைமுற்றும்அறுத்தவர்என்பதையும்முறையானேஉணர்த்து தற்கு நான்காவது திருக்குறளில் வேண்டுதல் வேண்டாமையிலான் என் றும் ஆறாந்திருக்குறளில்பொறிவாயி லைந்தவித்தான் என்றும் அருளினார்.

இதனால் இறைவர் காமரிபுவாதல் குறிக்கப்பட்டது.

சமஸ்தகல்யாண குணங்களினுலோங்கிப் பெரிய புகழ்படைத்தமை யினுலன்றே அப்பரப்பிரம்ம பகவானுக்குச் சிவ என்னுந் திருநாமம் போந் தது எனவும், அச்சிவ சப்தத்தை எக்காலத்தும் எவ்விடத்தும் உச்சாரணஞ் செய்தல்வேண்டும் எனவும், அங்ஙனஞ் செய்தலால் உலகிற் பயின்றபாவ

மனத்தையும் தகிப்பது சிவ என்னுந் திருநாமம் எளிபாராய் அச் சிவசப் தத்தைப் பொருள்சேர் புகழ் என்றமையினுற் குறிப்பித்தும் அதனை உச் சாரணஞ் செய்வாரைப் பரிந்தார் என்றும் ஐந்தாவது திருக்குறளில் உபதே சித்தனர்.

வீரிய பலத்தினுல் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் அப் பரப்பிரம்ம பகவானுர் என்பதை உணர்த்துதற்குத் தனக்குவமையில்லாதா னென்று ஏழாவது திருக்குறளில் அமைத்தருளினர்.

தருமைசுவரிய ஒளதாரிய மகராலயர் அப்பரப்பிரம்ம பகவனுர் என்பதை உணர்த்துதற்கு அறவாழியந்தணன் என்று எட்டாவது திருக் குறளில் வாழ்த்தினர்.

அங்ஙனம் ஸ்மிருதியிற் கண்டவாறு அப்பரப் பிரம்ம பகவானுக்கு அவ்வறு குணங்கள் உளவாம் முறையை மேலே உரைத்த குறள்கள்தோறும் பிரயோகித்தமையோடமையாது சாம வேதத்தைச் சார்ந்த சாந்தோக்கிய உபநிஷத்திலும் சர்வஞ்ஞாலேத்திரோத்திலும் முறையே காணப்படும் சர் வஞ்ஞதை முதலிய எண்குணங்களைச் சுசிப்பிக்குமாறு ஒன்பதாங்குறளில் எண்குணத்தானென்றும் இவ்வியல்புடைய பரப்பிரம்ம பகவானுகிய கட வுளை அடைக்கலமெனச் சார்ந்தவரேஜனனசாகரத்தைக் கடக்கவல்லுநராவ ரென்பதை விளக்குவாராய், பத்தாந்திருக்குறளில் பிறவிப் பெருங்கடல் நீந்துவரென்றும் அருளினர். சுபம்.

S. நடேசதேசிகர்.

கவர்ன்மெண்ட் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர்

நி ர வி.

இலக்கணப் பகுதி.

தொல்காப்பியம்.

நச்சினர்க்கினியம்.

பொருளதிகாரம்.

மரபியல்.

(க.) மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும் பறழுங் குட்டியுங் குருளையுங்
கன்றும் பிள்ளையு மகவு மறியுமென்
றொன்பதுங் குழவியோ டிளமைப் பெயரே.

இவ்வோத்தின் முதற்சூத்திரம் என்னுதலிற்றேவெனின் எல்லாப் பொருளின்கண்ணும் இளமைக் குணம் பற்றி நிகழுஞ் சொல் இவை யென்று வரையறுத்துக் கூறுகின்றது.

(இ - ன்.) மாற்றருஞ் சிறப்பிற் மரபியல் கிளப்பின்-விலக்கருஞ் சிறப்பிற்றாகிய மரபிலக்கணங் கூறின், பார்ப்பும் பறழும் குட்டியும் குரு ளையும் கன்றும் பிள்ளையும் மகவும் மறியும் என்று ஒன்பதுங் குழவியோடு இளமைப் பெயர்-குழவியோடு இவையொன்பதும் இளமைப் பெயர்.

எ - று

மேலன எட்டுங் குழவியுமென இளமைப் பெயர் ஒன்பதாயின. குழவியோடொன்பதென்னுது ஒன்பதுங் குழவியோடெனமயக்கங்கூறிய வதனாற் போத்தென்பதும் இளமைப் பெயரெனவும் பிறவும் வருவன உள வாயினும் கொள்ளப்படும். இவற்றையெல்லாம் மேல் வரையறுத்து இன்ன பொருட்கு இன்ன பெயர் உரித்தென்பது சொல்லும். மாற்றருஞ் சிறப்பி னென்றதனானே இவை ஒருதலையாகத் தத்தம் மரபிற் பிறழாமற் செய் யுள் செய்யப்படுமென்பதூஉம், ஈண்டுக் கூறுதனவாயின வழக்கொடுபட்ட மரபு பிறழவும் செய்யுளின்பம் படின் அவ்வாறு செய்ய வென்பதூஉம் கூறியவாறாயிற்று.

‘ அகலிருள் விசும்பிற் பாயிருள் பருகிப்-பகல்கான் றெழுதரு பல் கதிர்ப் பரிதி ’ எனவும், ‘ நம்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்-றென்னை கூறினள் புன்னையது நலனே ’ எனவும் வரும். அவற்றுள் பரி தியுஞ் செல்வனைப் பருகுங்காலும் என்றலும் புன்னை மரத்தினை நுவ்வை யென்றலும் மரபன்மையின் வழக்கினுண் மாற்றுதற்கு உரியவாமென்பது கருத்து. ‘ நிலவுக்குவித்தன்ன வெண்மணல் ’ எனவும், ‘இருடுணித்தன்ன வேனங் காணின்’ எனவும், ‘இருதூற் றன்ன விரும்பல் கூந்தல்’ எனவும் வருவனவும் அவை.

இலக்கணக்குட்டி.

சாத்திரப் பகுதி.

மங்கலம்.

(தொடர்ச்சி.)

காலைக் கட்டலுங் கம்மைக்கிண்டலும் அலகலையடுக்கடுக்காய்த் தொடுத்தலும் ஏலும், ஆயுள் நிலையென அவாவுதலடாகாம். ஆயுள் சொற்ப மாய சரற்காலக்கொண்மூவொப்பவும், நெய்யிலாத் தீப நிகர்ப்பவும், சாஞ் சல்யமான கல்லோலங்கடுப்பவும், கழியுமென்பது கண்கூடேயன்றே.

நிரையையும், பதிவிம்ப நிலவையும், மின்னலினீட்டத்தையும், கனகமலத்தையும் பற்ற விழைவுறினும் அழியுமியற்கைத்தாய ஆயுளை விரும்பலடாதென்ப. கிஞ்சித்தும் விசாரந்தியுறு மனமுடை மூடன், புருஷார்த்தோபயோகமற்று வறிதேபோமாயுளை, அசுவதரி சூல்வேட்ட லொப்பத்துன்பே துய்ப்பான்றனுக்கென வேட்பன். ஆண் பரிக்கும் பெண் கரத்திற்கு முதித்த அசுவதரியின் சூலானது அதனகட்டையேகீண்டு வெளிப்போதலகில மறிந்தேயன்றே. அவசியமடையத்தக்கதாய பரமபுருடார்த்தகாரணமாயும் மறித்துந்துயரீயாததாயும். மூக்கியஜீவன் முத்தியின் முதன்மையானவின் பிற்கிடமாயும், உற்றதாயவாணுளே நல்வாணுளாம். தருவிலங்குபறகைளின் வாணுளொத்த வாணுளுடையவர் வாணுள் வீணுளேயன்றி வாணுளாகாதென்ப தொருதலேயேயாம். யாவர்தம்மூள்ளம் தத்துவஞானத்சானேனும் வாசனுகூயத்தானேனும் பொன்றுநிற்குமோ அவர்தாம் மீண்டுஞ் சனியாவித்தகரும், உலகுடையர் நல் வாணுளுற்றவருமாவர். மற்றவரோகிழக்கர்த்தபமொத்தவரேயாவரெனவறிக. என்னே? அசுசியாய ஆகான்ம புந்தியாலேயாமென்க. பாரம்போல வீண் சிரம வேதுவாதலின் அவிவேகிகட்கு நூல் பாரமாம். அவாவினர்க்கருந்துயர் யாவற்றையு நூக்கும் பிரசித்த ஞானமும் பெரும் பாரமாம், மற்றவற்றைக் கேட்பானேன், சாந்தியிலார்க்குளம் பாரமாம், ஆன்மஞானமிலார்க்கங்கம் பாரமாம், புந்தி நலமிலார்க்காயுளுருமனம் புந்தியகங்காரம் செயலெவையும் சுமடர் சுமைபோன்று பெரும் பாரமாய்த்தன்பின் பொருட்டேயாம்.

(இன்னும் வரும்.)

வீர - சு.

நியாயமாலை.

(முன் தொடர்ச்சி.)

27. கஜபுக்த கபித்தபல நியாயம்:— கஜபுக்த கபித்த பலம் - யானையுண்ட விளாங்கனி, நியாயம் - திருஷ்டாந்தம். இது ஒருவனுக்குத் தீவினைப் பயனுல் செல்வம் போம்பொழுது காரணம் காணப்படாமலே போதலிதுபோல வென்கின்றது. அதாவது: யானையென்னும் ஓர் வித வியாதியால் நிகிக்கப்பட்ட விளாங்கனியினுள்ளிருந்த இரசவத்தானபலம் எங்ஙனம் காரணம் காணப்படாமலே போய்விடுமோ அதுபோலவென்பதாம்.

28. மர்க்கட கபித்தபல நியாயம்:— மர்க்கடம் - குரங்கு, கபித்தபலம் - விளாங்கனி, நியாயம் - திருஷ்டாந்தம். இது ஆகேப முகத்தால் சந்தேகநிவர்த்தி ரூப பலத்தையடைதலிதுபோலவென்கின்றது. அதாவது: விருக்ஷத்தினுச்சியிலுள்ள விளாங்கனியைப் பெறவேண்டிய வொருவன்,

அங்குள்ள குரங்கின்மீது கல்லெறிந்தால், அக்குரங்கு அவன்மீது விளாங் கனியைப்பறித்து எறியும். அதனால் அக்கனிகளே அப்புருடனடைகின் றன். அதுபோல என்பதாம். (குரங்கெறி விளங்காய் - என்பதுமிது.)

29. தண்டாபூப நியாயம்:— தண்டம் - தடி, அபூபம் - அப்பம் என்னும் ஓர்வித பணியாரம். நியாயம் - திருஷ்டாந்தம். இது ஆதேயத் திற்குக் கேடுவரும்போது ஆதாரத்திற்கும் கேடுவருத லிதுபோல வென் கின்றது அதாவது: தடியில் அப்பத்தைக் கோத்து ஓரிடத்தில் மாட்டி வைக்க, அந்த அப்பத்தைத் தின்னும் எலியானது அந்தத்தடியையுங் கடித்து விடுவது போல வென்பதாம்.

30. அசோகவனிகா நியாயம்:— என்பது - அசோகவன திருஷ் டாந்தம். இது கர்த்தாவினிஷ்டமே இதுபோன்றவற்றில் ஹேதுவா மென்கின்றது. அதாவது: இராவணன் உலகமாதாவாகிய சீதாபிராட்டி யாரை யெடுத்துக்கொண்டுபோய் அசோக வனத்தில் சிறைவைத்தான். அவருக்கு அநேக வனங்களிருக்க அசோகவனத்தில் பிராட்டியாரைச் சிறைவைப்பதற்கு ஹேதுயாது எனில், அவ்விராவணன் எந்த வனத்தில் பிராட்டியாரைச் சிறைசெய்தபோதிலும் இந்தக்கேள்வி யிருந்துகொண்டு தானிருக்கும்; ஆதலால் இராவணனது இஷ்டந்தான் அசோகவனத்தில் பிராட்டியை வைத்ததற்குக் காரணமாதல் போல வென்பதாம்.

31. பங்கூந கங்காபரிபதன நியாயம்:— பங்கு - முடவனிடத் தில், உரு - மிகுதியாக, கங்கா - கங்காதீர்த்தமானது, பரிபதனம் - வீழ்தல், நியாயம் - திருஷ்டாந்தம். இது பெரியார் கிருபையைப் பெறுதற்குத்தகுதி யில்லாத ஒருவனிடத்து, அப் பெரியார் வலிதிற் சென்று அருள் செய்த லிதுபோலவென்கின்றதுஅதாவது:முடவனிருக்குமிடத்துக்கங்காதீர்த்தம் தானே மிகுதியாகப் பிரவகித்து வந்தது போல வென்பதாம்.

(இன்னும்வரும்.)

அநந்தபத்மநாப ஸ்வாமி
காஞ்சீபுரம்.

சுபோத ரத்நாகரம்.

ஸ்ரீ ஜநார்த்தன ஸ்வாமி சைதன்யரின்

சற்போதனை.

சைதன்யாமிருதம்.

எப்போது மண்ணைத் தவிரக் குடம் காணப்படாதோ, அப்போது மண்ணைத் தவிரக்குடமிராது; அங்ஙனமே எந்தப் பதார்த்தத்தைவிட மண் காணப்படாதோ, அந்தப் பதார்த்தத்தைவிட மண்ணிராது.

எந்த மண்ணினுல் குடத்தின் ஆகாரம் விளங்குகின்றதோ, அந்த மண் எப்பதார்த்தத்தால் விளக்கமுறுகின்றதோ, அப்பதார்த்தத்தை விளக்க வல்ல வேறொரு பதார்த்தமின்று. ஆகலின் அப்பதார்த்தத்தையே சருஷி யானது சத்தியமெனக் கூறுகின்றது.

மண்ணைத்தவிர குடம் காணப்படாமையால் எங்ஙனம் குடம் மண் வடிவமோ, அங்ஙனம் எப்பதார்த்தத்தைவிட ஸர்வம் காணப்படாதோ, அத னுல் அப்பதார்த்தமே ஸர்வம். உன் சொரூபம் அப்படிப்பட்டதே.

அந்த உன் சொரூபத்தில் ஸ்திரமாய்நின்று சொரூபதிருஷ்டியால் பார். எங்கும் உன் சொரூபமே காணப்படும். சொன்ன இவ்விஷயத்தில் நிலைத்திருப்பதற்கு அருமையாயின் கொஞ்சம் குருகிருபையைப் பற்றுகப் பிடிப்பாயாக. அதுவே போதும்.

ஆபரண சிருஷ்டியில் பொன்னைத்தவிர யாதிருக்கின்றது? பார்! ஆதியிலும் பொன், அந்தத்திலும் பொன், மத்தியிலும் பொன். இப்பிர காரமே ஸஜ்ஜனர்களால் உலக சிருஷ்டியின் ஆதியிலும் அந்தத்திலும் மத்தியிலும் சிவமே பார்க்கப்பட்டது.

இந்தக் குருபதேசத்தைக் கேட்டு, சிஷ்யன் ஆக்ஷேபிக்கின்றான் ஸஜ்ஜனர்களுக்கு உலகம் காணப்படாதா என்ன? நான் அநேகம் பெரி யோர்களைப்பார்க்கின்றேன். அவர்கள் இதுகடம், இதுபடம் என்கின்றனர். ஒரு கூறுகின்றார்:— ஓ உத்தம சிஷ்யனே,

ஜகத்தில் சிவம் காணப்பட்டபோதிலும் எதுகாறும் விஸ்வாகார ஸ்திதியின் காலமுண்டோ, அதுகாறும் ஆகாரத்தின் நாசமுண்டாகாது. எங்ஙனமெனில், ஆபரணத்தைச் சுவர்ண ரூபமாகப் பார்த்தாலும் கேயூர குண்டலாகாரங்களது நாசமுண்டாகாது. ஒரோவிடத்து அதிஷ்டான ஞானகாலத்திலேயே கல்பிதரூபத்தின் நாசமுண்டாகின்றது. எங்ஙன மெனின், சர்ப்பத்தை இரஜ்ஜுவடிவமாகப் பார்த்தபோதே சர்ப்பாகாரத் தின் நாசமுண்டாகின்றது.

* பொன்னைப் பூஷணமாகப்பார்த்தல், கயிற்றை அரவாகப்பார்த் தல் இரண்டிடங்களிலும் அத்தியாசலக்ஷணம் சமானமாக விருக்கின்றது. ஆயினும்,

எந்த அத்தியாசத்தில் (கர்ம) இந்திரிய வியாபாரத்தினுடைய அல்ல தது மானச சங்கல்பத்தினுடைய சகாயமுண்டோ, அந்தவிடத்தில் அதிஷ் டாள ஞானத்தின் பிறகு (கர்ம) இந்திரியவியாபாரசங்கல்பகாலங்களுடைய முடிவு உண்டாகிற வரையில் அத்தியஸ்தாகாரத்தின் நாசமுண்டாகாது.

---

* பொன்னைப் பூடணமாகப்பார்த்தல், கயிற்றையரவாகப்பார்த் தல் - என்றது ஸ்தூலதிருஷ்டியால். விசாரதிருஷ்டியாலோ பொன்னில் பூஷணத்தைப் பார்த்தல், கயிற்றில் அரவைப்பார்த்தலாம்.

பொன்னைப் பூஷணமாகப் பார்ப்பதில் பொற்கொல்லாது கையின் வியாபாரம் கண்ணுக்குச் சககாரியாயிருக்கின்றது. அங்கு பூஷணத்தைப் பொன்வடிவமாகப் பார்த்தபோதிலும், சுத்தியினல் பூஷணத்தைஅழிக்குங் காறும் பூஷணம் காணப்படும். இரஜ்ஜுவை சர்ப்பமாகப் பார்ப்பதற்கு யாதொரு வியாபாரமும்கண்ணுக்குச்சககாரியாயில்லை. ஆதலினல்ஒருதரம் கயிற்றைக்கண்டால் பின் சர்ப்பரூபம் காணப்படாது. அங்ஙனமே பிரம்ஹத்தை விஸ்வரூபமாகப் பார்ப்பதில் ஈஸ்வர சங்கல்பம் திருஷ்டிக்குச் சககாரியாயிருக்கின்றது. ஆதலால் ஈஸ்வர சங்கல்பகாலம் பூர்ணமாங்காறும் விஸ்வத்தைப் பிரம்ஹ ரூபமாகப் பார்த்தபோதிலும் விஸ்வாகாரத்தின் நாசமுண்டாகாது.

கையால் செய்யப்பட்டது மனதினலும், மனதினல் கல்பிக்கப்பட்டது கையினலும் நிவர்த்தியாகாது. அங்ஙனமே இந்த விஸ்வம் ஈஸ்வர சங்கல்பகால கர்த்திருகமாதலின் இது காலத்தினலேயே நஷ்டமாக வேண்டும். உன்னல் சொல்லப்பட்ட சஜ்ஜனர்களுக்குக்கூட இவ்விதமாகவே கடாகாரங்களும் படாகாரங்களும் காணப்படுகின்றன.

(இன்னும் வரும்.)

ஆ - செங்கல்வராயமுதலியார்.

காஞ்சிபுரம்.

புத்தக வரவு.

புட்ப பந்தம்.

இதுகாறும் தமிழில் வெளிவராத இவ்வரிய நூல், மாதம் திதி நட்சத்திரம் கிரகம் இவற்றின் கூட்டுறவாலும், தசதாதுக்கள் முதலியவற்றின் சேர்க்கையாலும் மழை பெய்யுங் காலத்தை நன்கு தெரிவிப்பது. வடமொழியில் பரமேச்சுரன் பார்வதி தேவியார்க்கு உபதேசித்தருளிய நூலின்மொழிபெயர்ப்பாகும். திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகள் எழுதியருளிய முகவுரையோடு கூடியது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நன்கு மதிக்கப்பெற்றுச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்தது. 20. பவுண்டு கிளேஸ் டிம்மி காகிதத்தில் அச்சிடப்பட்டு அழகமைந்துள்ளதாகிய இப்புத்தகம் யாவர்க்கும் பயன்றரக்கூடியதாதலின் ஒவ்வொருவர் கையிலும் இருக்கத்தகுந்தது. இதன் விலை அணை காணகே. வேண்டுவோர் இதையச்சிட்டு வெளிப்படுத்தியபறங்கிப்பேட்டை, எகாம்பரஆசாரி வீதி ஸ்ரீமான் சு. எ. குமாரசுவாமி ஆசாரியாரவர்களிடத்திலும், மெடியூர் முதலியார் வீதி ஸ்ரீமான் ப. அ. கிருஷ்ணசாமிப்பிள்ளையவர்களிடத்திலும் விலைக்குப் பெற்றக்கொள்ளலாம்.

இதைநமதுபார்வைக்கனுப்பியஸ்ரீமான் சு. எ. குமாரசுவாமியாசாரி யாரவர்கட்கு நமது நன்றியை யனுப்புகின்றோம்.

ப - ர்.

சமாசாரம்.

நெப்போலியன் உருவச்சிலை.

பிராஞ்சு தேசத்துச் சக்ரவர்த்தியாய்ப் பிரசித்திபெற்றிருந்த நெப் போலியனது மார்புபரியந்தமுள்ள ஒருருவச்சிலை லண்டன்மாநகரத்தி லுள்ள வெல்லிங்டன் வீதியில் இம்மாதம் முதல்வாரத்தில் 190 பவுண்டிற் கும், அவரது கைத்துப்பாக்கியொன்று 135 பவுண்டிற்கும் ஏலத்தில் விற் கப்பட்டனவாம்.

ஒரு குருடனது புத்தி விசேஷம்.

இங்கிலாந்து தேசத்திலுள்ள கார்ன்வாலில் வசிக்கும் ஜேம்ஸ்கிம் என்னும் ஓர் பிறவிக் குருடன் ஒவ்வொரு நாளும் பிறருதவியின்றி 17 மைல் தூரம் புதிய விடங்கட்குச்சென்று தேயிலை விற்றுப் பிழைக்கின்றா னும். அவன் வழிதப்பிப் போனதேயில்லையாம். அவன் எந்தப் பொருளை யும் தொட்டுப்பார்த்து இது இன்ன நிறமுடையது என்று கூறுவானும்.

பிச்சைக்காரர்களுக்கொரு பத்திரிகை.

பிராஞ்சுதேசத்துள்ள பரீஸ் நகரத்தில் பிச்சைக்காரர்களுக்கென்று ஒரு பத்திரிகை பிரசுரம் செய்யப்பட்டுவருகிறதாம். அதிற்குறிப்பிடும் விஷ யம் பிறர் தருமம் செய்யும் தேநீர் இடம் முதலியனவாம்.

வெள்ளம்.

காவிரி நதியிலும் கொள்ளிட நதியிலும் வெள்ளம் அளவு கடந்து வருகிறது. இதனால் அபாயமுண்டாகக்கூடுமென்று கருதப்படுகின்றது.

வைதிகக் கப்பல்.

கல்கத்தாவில் வசிக்கும் இந்து பிரபுக்களுள் சிலர் கூடி, வைதிக இந் துக்களது ஆசாரங்களுக்குக் குறைவு நேராதபடி, சைனா, ஜப்பான், யுனை டெட்ஸ்டேட், ஐரோப்பாமுதலிய தேசங்கட்குப் பிரயாணம் செய்ய அவர்களுக்குச் சர்வ சௌகரியங்களும் அமையக் கப்பல்கள் செய்துவிட ஏற்பாடு செய்து வருகின்றனர்.

கிழமணமறுப்புச் சங்கம்.

பம்பாயிலுள்ள இந்துக்களுள் சிலர் கூடி ஒரு சங்கமேற்படுத்தி, சிறு பெண்களைக் கிழவர்கள் கலியாணம் செய்துகொள்வதைத் தடுக்க முயற்சி செய்து வருகின்றனர்.

பல கண்காக்ஷிகளில்

மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி - சுப்பராயர், ஆயுர்வேத

ஔஷதசாலை.

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து

இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பராயரின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

24. ஜ்வராமிருதம்:—தாவர வர்க்கத்தைச்சார்ந்த அநேக அபூர்வ மூலிகைகளால் செய்யப்பட்ட இச்சூர்ணம் காபி, தேயிலைக்குப் பதிலாக உபயோகப்படுத்துவதற்காகவே தயார் செய்யப்பட்டிருக்கிறது. காபி தேயிலைக்குள்ள துர்க்குணங்கள் இதற்கில்லை. காபி பொடியை எவ்விதம் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே இதையும் உபயோகிக்க மிகவும் ருசியான பானமாகும். அதைக் குழந்தை முதல் விருத்தாப்பியர்கள் வரையில் எல்லோரும் உபயோகிக்கலாம். சுரம், ஜன்னி, கர்ப்பம், பிரசவம், காலரு முதலிய காலங்களில் மேற்படி சூரணத்தின் கஷாயத்தை பாலுடன் அல்லது பாலை சேர்க்காமல், சமயத்திற்குத் தக்கபடி உபயோகிக்க, ஜனங்களை நோய்களிலிருந்து குணப்படுத்துவதுமன்னியில், நோய் வராமல் தடுக்கும். பித்த வாயு, காசம், க்ஷயம், அஜீர்ணம், மலச்சிக்கல், தலைவலி முதலியவைகளைப் போக்கும். இரத்தத்தை சுத்தி செய்து தாது விர்த்தியையும், தேக ஆரோக்கியத்தையும் தரும் அக்கினிமாந்தமுள்ளவர்களுக்கும், மதி மூத்திரம், அதி மூத்திர ரோகிகளுக்கும், அருமையான வஸ்து. இதை வழக்கமாய் உபயோகித்துவந்தால் மதி மூத்திர ரோகிகளின் நீரிலுள்ள சித்திப்பையும், நீரின் அளவையும், குறைத்து, மூத்திர ரோகத்தை அடியோடு குணமாக்கும். தேகத்தின் உஷ்ணத்தைச் சாந்தி செய்யும். மூளையைப்பலப்படுத்தி, ஞாபக சக்தியை அதிகப்படுத்தும். மாணாக்கர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள், பகைக்கத்தக்க குணமுள்ள காபி, தேயிலையை விட்டுவிட்டு, இதை உபயோகிக்க அருமையான சூர்ணம். டப்பா 1-க்கு விலை அணா 6, வி. பி. சிலவு அணா 3 பிரத்தியேகமாகும்.

25. சர்பத்துகள்:—திராக்ஷைப்பழம், நன்னாரிவேர், ரோஜா புஷ்பம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், மாதளைப்பழம், கிச்சிலிப்பழம், பாதம், அன்னாசிப்பழம், தருஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சீமை இலந்தைப்பழம், தாமரை புஷ்பம் இஞ்சி சர்பத்துகள் மேற்படி சர்பத்துகள் பழ வகைகளின் சத்

துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் காணக் காணவே உபயோகிக்கவேண்டும். ஒரு சேர் குளிர்ந்த ஜலத்திலாவது, சோடாவாட்டரிலாவது, சுமார் 5 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும், எந்த பழசர்பத்து உபயோகிக்கப்பட்டதோ, அந்த பழத்தின் மதுரமான வாசனையோடுங்கூடிய சர்பத்தாகும். ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படும். இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது சோடா வாட்டரோடாவது சேர்த்தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும். அதை அவுன்சுள்ள சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. சிலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

27. சுகந்த முக்குத்தூள்:—இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒரு நாளைக்கு ஒரு மனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானே அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்து நன்றாய்க் கலந்துகொள்ளுடால், அந்தத்தூள் முழுவதும் அதிக மனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை சேர்த்தாலே போதுமானது. தனிமையாக உபயோகப்படுத்துவதனுலுவசியம் இத்தூள் சேர்ந்த மூக்குத்தூள் மிகடாமல் நெடுநாள் சுகந்த பரிமளத்துடன் காரம்போகாமலிருப்பதுமின்றி, சுவாசனை மூக்கில் சுற்றிக்கொண்டேயிருக்கும். தலைவலி, பீனிசம், ஜலதோஷம், நாசியிலிருந்து நீர் வடிதல், மண்டைக்குற்று, நீர் பீனிசம், நாசியில் தூர் நாற்றம், மயக்கம் முதலியது தீரும். இதில் சுவாச்சாரம் சேரவில்லை. வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள தூர் நாற்றத்தை நீக்கி சதா, சுகமகவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம்போடுகிற வழக்கத்தை நாளுக்குநாள் குறைத்து கடைசியில் சிலர் தூள்போடும் அப்பியசத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிக்கு செய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்த மூக்குத்தூள் சுமார் ஒரு மாதத்திற்குப் போதுமானது. சீசா 1-க்கு விலை அணா 4, 1 முதல் 4 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 8 பிரத்தியேகம். 4 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம். 7 முதல் 12 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 6 பிரத்தியேகம்.

☞ எனது விலாசம்
பி. சுப்பராயர்,
ஆயுர்வேத ஔஷதசாலை,
ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்
கோயில் சன்னதி, தஞ்சாவூர்.

☞ MY ADDRESS
P. SUBBAROY
Ayurvedic Pharmacy.
Sri Venkatesa Perumal Koil
Sannathy, TANJORE.

என்ன காரணம்?

சுவற்றை ஏ
எழுத வேண்டு
பாடுபட்டு
வைப். தொ
மாயினும்
தித்துப் பா
யம் என்னும்
யம் உங்களிட
பொது நலத்
டிருக்கும் — ஆ
ஸ்தானம் எ
முள்ள — 180
இன்றைக்கே

வைத்தன்றே சித்திரம்
ம். ஆயுள் பரியந்தம்
வதெல்லாம் சுகவாழ்
கன்றே! சற்று நேர
ன் நிலைமையை சித்
கள். பூரண ஆரோக்கி
அரும் பெரும் பாக்கி
ம் தங்கியிராவிட்டால்,
தயே கருதி வெளியிட்
ரோக்கியத்துக்கு ஜீவ
னும் அனுபவ ஞான
-பக்கப் புத்தகத்திற்கு
ழுதுங்கள்.

இப் புத்தகம் இல
அனுப்பப்படும்.

மாகவும் தபாற் செலவில்லாமல்

த்திய சாஸ்திரி
ங்கர் கோவிந்தஜி,
ங்க நிச்சய ஔஷதாலயம்,
22, பிராட்வே, மதராஸ்.
எஜெண்ட்.

ல்லையப்ப முதலியார்,
ன்னக்கடைத் தெரு
திருச்சினாப்பள்ளி.

விளம்ப[illegible]பரம்.

[illegible]த்திரை.

இராஜ சுக [illegible]

இம் மாத்திரை பழைய சக்ரவர்[illegible]த்திகளால் ஆதரிக்கப்பெற்றபெரிய ஹக்கீம்களுடைய அரிய முறையின்படி[illegible]செய்யப்பட்டது. உலகத்தில் ஆண் தன்மை யிழந்து என்செய்வோமென்[illegible]று வருந்துபவர்களுக்கு இது ஒரு பெரிய சஞ்சீவி. கனவான்களே! நீங்கள்[illegible]நோயற்றுச் சுகத்தை யனுபவிக்க விரும்பினால் இராஜ சுக மாத்திரையை[illegible]எடுத்துக்கொள்ளுங்கள். அதுநல்ல பரீதன முண்டாக்கும். அஜீரணத்தைப் போக்கும். மலஜலப்பிரவர்த்தி யைச் சுத்தப்படுத்தும். உடம்பு வலி, மார்பு வலி இன்னும் வாய்வு சம்பந்த மான சகல வியாதிகளையும் கண்டிக்கும். குறிப்பாகச் சொல்லுகிறோம். நீங்கள் நீடித்த போகத்தை விரும்பினால் இராஜ சுக மாத்திரைக்கு இன்[illegible]க்கே எழுதுங்கள்.

[illegible]பி 1 - க்கு ரூ 1 - 8 - 0

12 மாத்திரை அடங்கிய டப்[illegible]தைலம்.

தாதுபுஷ்டி

இது ஆண் தன்மையை முழுதும் இழந்துபோனவர்களுக்கு அந்தச் சக்தியை மறுபடியும் உண்டாக்குகிறதன்றி, இத்தைலம் வயது சென்றவர்களை யும் வாலிபராக்குமென்பது உபசாரமன்று. குணமில்லாவிடில் கொடுத்த பணம் திரும்ப வாபீஸ் செய்யப்படும்.

[illegible]ம் ரூ 10 - 0 - 0

தோலா 1 - க்கு கிரய[illegible]தோலா போதுமானது

ஒரு ஆளுக்கு அரைக்கால்[illegible]ர்ணம்.

தங்க சூ[illegible]

இவ்வருமையான சூர்ணம் 12 [illegible]ருஷத்து வெட்டையையும் பறக்கச் செய்துவிடும். காதைக் கெட்டிப்படுத்[illegible]தும். இடுப்பு வலி, முழங்கால் வலி, முதுகுவலி இன்னும் வெட்டையைப்[illegible]பற்றிய வியாதிகளனைத்தையும் கண் டிக்கும்.

[illegible]ம் ரூ 1 - 8 - 0

சீசா 1 - க்கு கிரய[illegible]லா வியாதிகளுக்கும் சம்மிடத்தில் ஆண்டவன் கிருபையால் எல்[illegible]வியாதிகளை விபரமாக எழுதியனுப் மருந்து கிடைக்கும். கடித மூலமாய்[illegible]த்தை உபயோகிக்கவேண்டிய பிலால் தகுந்த மருந்துகள் அனுப்பப்படு[illegible]க்கொள்ளலாம். முறைமுதலியனமருந்துடன்வரும் கே[illegible]ப்போம்.

N. B.—எந்தப் பாஷையில் எ[illegible]